(ஆ) இந்நாள் மதிப்பின்படி ரூ.112.94 இலட்சங்கள்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேலைகள் எப்போது துவங்கப்படும்? எப்போது முடியும்? இந்தத் திட்டத்தின் மூலம் பயனடையும் குடிசைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம் 8 பகுதியில் 721 குடும்பங்கள் என்ற தகவல் இருக்கிறது. மேலும் ஒரு பகுதியில் 298 குடும்பங்கள் என்ற தகவல் இருக்கிறது. மற்ற இடத்தில் எவ்வளவு பேர் என்ற தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு.ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மற்ற முக்கிய நகரங்களில் உள்ள பகுதிகளுக்கும் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தி செயல்படுத்தும் எண்ணம் உள்ளதா? அதைச்செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி ஆலோசனை செய்யவேண்டும்.

குடிநீர் வடிகால் வாரியத்திற்குத் தேவையான குழாய்கள் தயார் செய்யும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

வினா எண். 72. திரு. கே. ஆர். கணபதி திரு.எஸ். டி. உகம்சந்த் டாக்டர் கே. பி. இராமலிங்கம்— மற்றும் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் குடிநீர் வடிகால்த் வாரியத்திற்கு தேவையான குழாய்கள் தயார் செய்யும் தொழிற்சாலை அமைக்கப் படுமா

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குத் தேவையான கற்சாரைக் குழாய்கள் (Pre stressed concrets pipes) மற்றும் சுட்டமண் குழாய்கள் (Stone ware pipes) ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை தமிழகத்தில் தகுதி வாய்ந்த இடங்களில் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து பூர்வாங்க நடவடிக்கை வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

[1983 ஜனவரி 31

(முற்பகல் 10–00)

திரு. எஸ்.டி. உகம்சந்த்: தலைவர் அவர்களே, இந்த வாரியம் எப்போது செயலுக்கு வரும்? எவ்வளவு மதிப்பீட்டில் அந்தத் தொழிற்சாலை அமைய இருக்கிறது என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; தலைவர் அவர்களே, சாத்தியக் கூறுகள் குறித்து பூர்வாங்க நடவடிக்கை வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டது. பூர்வாங்க நடவடிக்கை முடிந்த பிறகு எவ்வளவு விரைவிலே வேலை செய்ய முடியும் என்று கணித்துக் கூற முடியும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, அரசு இந்தத் தொழிற்சாலையைத் துவங்குவதற்கு முன்னால், அதுவரையில் வேலையில்லாத பட்டதாரிகள் கூட்டுறவு அடிப்படையில் குடிநீர்க் குழாய்கள் தயார் செய்ய முன்வருவார்களானால் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து குடிநீர்வடிகால் வாரியம் அவர்களிடமிருந்து குழாய்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: புரப்போசல்ஸ் தயார் செய்து குடிநீர் வடிகால் வாரியத் தலைவரை அணுகி அந்தப் பொறியியல் என்சினியர்கள் அதை ஏற்றுக் கொள்கின்ற நிலை ஏற்பட்டால் அதைப் பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

திரு. கோவைத்தம்பி: தலைவர் அவர்களே, இந்த வடிகால் வாரியம், குடிநீர் வாரியம் இரண்டிற்கும் இந்த பைப்களை சப்ளை செய்வதற்குத் தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட கம்பெனிகள் எவ்வளவு இருக்கின்றன. அப்படிப்பட்ட கம்பெனிகள் இல்லையென்றால் இந்த பைப்களைப் பெறுவதற்கு எந்த மாநிலத்தோடு முயற்சிகளைச் செய்துகொண்டிருக்கிறோம் அப்படியில்லையென்றால் உறுப்பினர் டாக்டர் இராமலிங்கம் குறிப்பிட்டதைப் போல் வேலையில்லாத பட்டதாரிகள் மூலமாக இந்தத் திட்டத்தை ஊக்குவிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எ. இராகவானந்தம். தலைவர் அவர்களே, இரண்டு வாரியங்கள் இல்லை. குடிநீர் வடிகால் வாரியம்என்ற ஒரே வாரியம் தான்அது. மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்கு விரிவான பதில் கொடுத்தாக வேண்டும். எனவே தனிக் கேள்வியாகப் போட்டால் விரிவாக பதில் தரமுடியும்.

திரு. வ. சத்தியமூர்த்தி: தலைவர் அவர்களே, தமிழகத்திலே குடிநீர் வடிகால் வாரியத்தினால் நிறைவேற்றப்படுகின்ற பணிகள் தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு இருக்கக் கூடியவை அல்ல. இப்போதே நூற்றுக்கு 80 சதவீதம் பணிகள் முடிந்து விட்டிருக்கின்றன. இந்த நிலையில் புதிதாக தொழிற்சாலை அமைத்தால் எதிர்க்காலத்திலே அவற்றைப் பயன்படுத்த வாய்ப்பு இருக்கிறதா என்பதைத் துறை பரிசீலித்து இருக்கிறதா

1983 ஜனவரி 31]

மாண்புமிகு திரு. எஸ். இராகவாணந்தம்: தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்கு நேரடியாகத் தொடர்பு இல்லாதது என்றாலும் நிரம்பப் டனிகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் காள் கிறேன். தொழிற்சாலைகள் தேவைப்படுகின்றன.

நென்மேனி அணைக்கட்டுத் திட்டம்

வினா எண். 73— திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தூர் தாலுக்கா நென்மேனி அணைக்கட்டுத் திட்டம் இந்த நிதி ஆண்டில் ஆரம்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில் மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ மற்றும் ஆ) இராமநாதபுரம் மாவட்டம், சாத்தூர் தாலுக்காவில், வைப் பாற்றின் குறுக்கே நென்மேனி; இருக்கங்குடி கிராமங்களுக்கருகே ரூ.6.90 லட்சம் மதிப்பீட்டில் நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து இந்த கேள்விகளுக்குவிடையளிக்கப் படுகின்ற இந்த நேரத்திலே அந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளப் பட்டு செயல்படுத்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: இந்தத் திட்டத்திற்கு காஸ்ட் புரடக்ஷன் ரேஷியோ எந்த அடிப்படையில் உள்ளது. இதனால் புதிய ஆயக் கட்டுகள் எத்தனை ஏக்கர் வரும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: இந்தத் திட்டத்தினுடைய பயன் செலவு விகிதம் 1: 24: 1 ஆகும், இது பயனுள்ள திட்டம் என்று கருதி 600லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள அரசு அனுமதி வழங்கியிருக் கிறது. இதன் காரணமாக 9156 ஏக்கர் புன்செய் நிலம் புதிய பாசனம் பெறும் என்றும், 614.11 ஏக்கர் நிலத்திற்குப் பாசனப் பற்றாக்குறை போக்கபடுமென்றும் 626.97 ஏக்கர் நன்செய் நிலங்களுக்கு பாசன உறுதி கிடைக்கும் என்றும் இந்தத் திட்டத்தினால் உணவு உற்பத்தி சுமார் 10175 டன் கிடைக்கும் என்றும் மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சோரணம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, எப்போது இந்தத் திட்ட வேலை முடிக்கப் படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார் களா?